ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)



சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
15, பங்குனி 2026

Date:
29, மார்ச் 2026

வகுப்பு 31

www.vedaneri.org

அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் : 24

# புகழ்

## இல்வாழ்வின் இம்மைப்பயன்

- இல்வாழ்க்கை முதல் ஈகை இறுதியாகச் சொல்லப்பட்ட இல்லறத்தை முறையாகக் கடைப்பிடித்து வாழ்பவர்க்கு இம்மைப்பயனாக வந்து நிலைத்து நிற்கும் புகழ்.

- புகழ் பெரும்பாலும் ஈகையால் ஏற்படும் என்பதால் ஈகையின்பின் வைக்கப்பட்டது.

குறள்: 1 - 3 புகழின் சிறப்பு

1. உயிர்வாழ்தலின் பயன் கொடுத்துப் புகழடைதலே.
2. கொடுப்பவரே உண்மையான புகழுக்குரியவர்.
3. உலகில் என்றும் அழியாமல் நிற்பது புகழே ஆகும்.

குறள்கள்: 4, 5 புகழுடையார் அடையும் மேன்மை

1. தேவர்களாலும் புகழப்படுவர்.
2. அழியாமல் புகழுடலுடன் என்றும் வாழ்வர்.

குறள்கள்: 6 - 9 புகழ் இல்லாதவரது தாழ்வு

1. புகழ் இல்லாவிடில் மனிதப்பிறவி வீணானது.
2. வருத்தம் உண்டாகும்.
3. புகழ் இல்லாமையே இகழாகும்.
4. இயற்கை வளம் குறையும்.

குறள்: 10 உயர்வும் தாழ்வும்

1. புகழ்தோன்ற வாழ்பவர் வாழ்பவர் ஆவார்; இகழுள்ளவர் இறந்தவர் ஆவார்.





## 1. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்க்குக் கொடுத்தல், அதனால் புகழ் உண்டாக வாழ்தல் என அப்புகழ் அல்லாமல் மனித வாழ்க்கைக்கு பயன் வேறொன்றும் இல்லை.

ஈதல் = இல்லாதவர்களுக்குக் கொடுத்தல்
இசைபட வாழ்தல் = புகழ் தோன்ற வாழ்தல்
ஊதியம் = பயன்
உயிர்க்கு = ஈதலும் புகழும் மனிதப்பண்பு என்பதால் உயிர் என்பது இங்கு மனித இனத்தைக் குறிப்பதாகும்.

புகழ் உண்டாகக் கல்வி, செல்வம், நல்லொழுக்கம், நடுவுநிலைமை, நற்குடிப்பிறப்பு, வீரம் போன்ற பல்வேறு காரணங்கள் இருந்தாலும் அவற்றுள் ஈகை சிறந்தது என்பதால் ஈதலால் வரும் புகழ் என்றார்.

உயிர் உடல் எடுத்து வாழும் வாழ்க்கையில் இறுதியாக மிஞ்சுவது எதுவும் இல்லை. ஈகையால் ஒருவருக்குக் கிடைக்கும் புகழ் மட்டுமே என்றும் இருக்கும் என்பதால் அதைத் தவிர உயிர்வாழ்க்கையின் பயன் வேறொன்றுமில்லை என்றார்.

ஈதலால் உண்டாகும் புகழல்லாமல் வாழ்விற்கு வேறு இம்மைப்பயன் இல்லை.

## 2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்.

வறுமையால் யாசிப்பவர்களுக்குக் கொடுப்பவரைப் பற்றிய புகழ் மொழியே (உலகில் ஒன்றைப் புகழ்ந்து) சொல்லுபவர் சொல்லும் (உரைகளிலெல்லாம் உண்மையான) புகழுரையாகும்.




உரைப்பார் = உரைப்பவர் = சொல்லுபவர்
உரைப்பவை = கூறுபவை

வேறு பலகாரணங்களாலும் புகழ் ஏற்படும் என்றாலும் வறியவர்க்குக் கொடுப்பதனால் உண்டாகும் புகழே சிறந்ததாகும் என்பது கருத்து.

புகழுக்குரியவர் ஈகையாளரே.

## 3. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
## பொன்றாது நிற்பதொன் றில்.


தனக்கு இணையில்லாத ஒன்றான உயர்ந்ததான புகழ் அல்லாமல் உலகத்தில் அழியாமல் நிற்பது வேறொன்றில்லை.

ஒன்றா = ஒப்பற்ற ஒன்றாக
பொன்றாது = அழியாமல்

கொடுத்தற்கரிய உயிர், உடல் உறுப்புகள் முதலானவைகளையும் கொடுப்பதால் வரும் புகழுக்கு நிகராக வேறொன்றில்லை.

தசீசி முனிவர், சிபிச்சக்ரவர்த்தி, கர்ணன் போன்றோர் உடல் உறுப்புகளைக் கொடுத்துப் புகழடைந்தனர். உயிரைக் கொடுத்த தியாகிகள் எத்தனையோ பேர் உள்ளனர்.

இவை மூன்று பாட்டாலும் புகழின் சிறப்புக் கூறப்பட்டது.



சாதல்வந் தடுத்த காலும் தனக்கொரு சாதலின்றி
பூதல மிறக்கும் காலும் புகழுடம் பிருக்கும்.
(விநாயக புராணம்)

## 4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப் போற்றாது புத்தேள் உலகு.

பூமியின் எல்லைவரை அழியாது நிற்கும் புகழை ஒருவன் செய்வானென்றால் ஸ்வர்க்க லோகமானது தம்மை அடைந்திருக்கின்ற அறிஞரைப் புகழாது. (இவனையே போற்றும்)

நிலவரை = நிலத்தின் எல்லை - பூமியின் முடிவு வரை
புத்தேள் உலகு = தேவருலகம்

ஈகையின் பயனாக பூமியின் எல்லைவரை புகழையும், அவ்வீகையினால் உண்டான புண்ணியத்தினால் ஸ்வர்க்க லோகத்தையும் அடைந்திருக்கும் ஈகையாளரை விரும்புவது போல அறிஞனை விரும்புவதில்லை தேவருலகம்.



## 5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
## வித்தகர்க் கல்லால் அரிது.

**அறிவுடையவர்களுக்கு அன்றி பெருக்கத்திற்கு ஆகும் வறுமையும் உண்டாகும் மரணமும் இல்லை.**

**நத்தம் = நந்து + அம் = பெருகுதல்**
**கேடு = கெடுதல் - வறுமை**
**உளது ஆகும் = இருப்பது ஆகும்**
**சாக்காடு = அழிவு, மரணம்**
**வித்தகர் = அறிஞர்**
**அரிது = இல்லை.**

**நத்தம் ஆகும் கேடும் அரிது (இல்லை), உளதாகும் சாக்காடும் அரிது (இல்லை) அறிவுடையவர்க்கு அல்லாமல்.**

**(புகழ் எனும் செல்வத்தைப்) பெருக்கும் வறுமையும் (புகழ் எனும் உடலை) நிலைக்கச் செய்யும் மரணமும் அறிஞர்களுக்கே உண்டு.**



வறுமை என்பது இல்லாமை, மரணம் என்பது இருப்பது அழிந்து போவது. ஆனால், அறிஞர்களுக்கு ஏற்படும் வறுமை புகழின் பெருக்கத்தையும், மரணம் புகழின் நிலைத்தலையும் செய்கிறது.

அறிஞர்களுக்கு புகழுடம்பு பெருகுதலும் அழிவில்லாமல் நிலைத்திருத்தலும் உண்டாகும்.

கொடுக்கும் பண்பில்லாத மூடர்கள் தூலவுடலுடன் வறுமை இல்லாமல் நீண்ட காலம் வாழ்ந்தாலும் புகழுடல் இல்லாமல் அழிந்து விடுகிறார்கள்.

அறிஞர்கள் வறுமை அடைந்தாலும் தூலவுடல் அழிந்தாலும் புகழுடம்புடன் அழிவில்லாமல் என்றும் இருப்பர் என்பது கருத்து.

இவ்விரண்டு பாட்டாலும் புகழுடையார் அடையும் மேன்மை கூறப்பட்டது.

## 6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
## தோன்றலின் தோன்றாமை நன்று.

மனிதராய் பிறந்தால் (வாழ்ந்தால்) புகழிற்குக் காரணமான குணத்தோடு பிறக்கக்கடவர் (வாழக்கடவர்). அக்குணமில்லாதவர் (மனிதராக) பிறவாமையானது நன்று.

புகழ் = புகழிற்குக் காரணமான நற்குணம். காரியவாகு பெயர்.
தோன்றாமை = பிறவாமை. மனிதரன்றி மற்ற உயிர்களாகப் பிறத்தல்.

புகழோடு வாழ்தலே மனிதப்பிறவியின் பயனாகும். புகழிற்கான ஈகைக்குணம் இல்லையென்றால் மனிதரன்றி வேறு விலங்காகப் பிறத்தல் நன்றாகும்.

வேறு பிறவிகளில் இகழ்வார் இல்லாமையால் 'நன்று' என்றார்.

புகழுடையாதார் மனிதப்பிறவியின் பயனை அடைதலில்லை.



## 7. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை இகழ்வாரை நோவ தெவன்.

தமக்குப் புகழ் உண்டாக வாழாதவர் (அதுபற்றி பிறர் இகழும்போது) தம்மை (தம்முடைய அறம் செய்யாமையை) வெறுக்காதவராக இருந்து தம்மை இகழ்ந்து பேசும் பிறரை வெறுப்பது என்ன நினைத்தோ?



நோதல் = நொந்து கொள்ளுதல், வருந்துதல், வெறுத்தல்.

தாம் செய்ய வேண்டிய அறச்செயல்களைச் செய்யாமல் விட்டு அதனால் எவ்வித புகழும் உண்டாகாமலும் இகழ் உண்டாகியும் வாழ்பவர், தம்முடைய இழிவான வாழ்க்கைக்கு தம்முடைய அறம் செய்யாமையே காரணம் என்பதை நினைந்து தம்மை நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்கின்ற மற்றவர்களை வெறுப்பது அறியாமையே ஆகும்.

புகழ் தரும் செயல்களைச் செய்து வாழும் நற்பண்புகள் இல்லாதவர் பிறரை வெறுப்பதால் பயனில்லை.

## 8. வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும் எச்சம் பெறாஅ விடின்.

புகழென்னும் எச்சத்தைப் பெறாவிட்டால் பூமியில் உள்ளவர்களுக்கெல்லாம் அதுவே வசையாகும் என்பர் பெரியோர்.

வசை = இகழ், இகழ்ச்சி.
வையம் = உலகம்
எச்சம் = எஞ்சி நிற்பது. மனிதன் இறந்த பின்னரும் இறவாமல் உலகம் உள்ளளவும் எஞ்சி நிற்கும் புகழ்.

புகழ் இல்லாவிட்டாலும் இகழ் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தால் அது இயலாது. ஏனெனில் புகழ் உண்டாக்கும் செய்கையில்லாமையே இகழ் உண்டாக்கும் என்றார்.

புகழ் இல்லாமையே இகழ் ஆகும்.



## 9. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
## யாக்கை பொறுத்த நிலம்.

புகழில்லாத உடம்பைச் சுமந்த விளைநிலமானது குற்றமில்லாத வளமாகிய பயனில் குறைந்து போலும்.

**வண்பயன் = வளம் நிறைந்த பயன். நெல்முதலான பொருட்களின் உற்பத்தி.**
**குன்றும் = குறையும்**
**யாக்கை = உடல். யாத்தல் = கட்டுதல். தோல் முதலான ஏழு தாதுக்களால் கட்டப்பட்டிருப்பதால் உடலுக்கு யாக்கை என்று பெயர்.**

யாக்கை என்றதனால் புகழில்லாத உடல், உயிரற்ற வெற்றுடல் என்பது காட்டப்பட்டது.

அறச்செயல்களால் புகழுடைந்திருக்கும் மனிதர்கள் நிறைந்திருக்கும் நாடு இயற்கை வளமிக்கதாக இருக்கும். அறச்சிந்தனை மனிதர்களிடம் குறையும்போது இயற்கை வளமும் குறைந்து போகும் என்பது கருத்து.

புகழற்ற மனிதரைப் சுமக்கும் நிலம் நல்ல விளைச்சலைத் தருவதில்லை.

இவை நான்குபாட்டாலும் புகழ் இல்லாதவரது தாழ்வு சொல்லப்பட்டது.

## 10. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
## வாழ்வாரே வாழா தவர்.

வசையுண்டாகாமல் (புகழ் உண்டாக) வாழ்பவரே உயிர் வாழ்பவராவார். புகழ் உண்டாகாமல் (இகழ் உண்டாக) வாழ்பவர் உயிர்வாழ்க்கை இல்லாதவரே (இறந்தவர்) ஆவர்.

வசை = இகழ்
இசை = புகழ்
வாழாதவர் = இறந்தவர்.

புகழின்மையே இகழ் என (முந்தைய குறளில்) கூறப்பட்டது. புகழ் தோன்ற வாழ்தலே மனித வாழ்வின் பயன். புகழில்லாமல் இகழ் தோன்ற வாழ்தல் வாழ்வை வீணாக்கியதாகும். ஆகவே அதை மரணம் என்றார்.

‘இசையிலா யாக்கை’ என்பதற்கு விளக்கம் கூறினார்.

“இசைதோன்ற வாழ்பவரே வாழ்பவர்; வசைதோன்ற வாழ்பவர் வாழாதவரே” என்பதை எதிர்மறையாகக் கூறினார்.

இதனால் புகழில் உயர்வும் புகழின்மையின் தாழ்வும் கூறப்பட்டது.

இல்வாழ்க்கையின் மறுமைப்பயன் தேவலோகம் என்பது ‘வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்’ என்று முன்பும், இம்மைப்பயன் புகழ் என்பது இங்கும் பெறப்பட்டது.

இல்லறவியல் முற்றுப்பெற்றது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com